THE MADURA-RAMNAD DIOCESAN MAGAZINE

SATHIAVARTHAMANI

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
15 SEP 1955
MADRAS

August, 1955

மதுரை-ராமநாதபுரம்

அத்தியட்சாதீனத் தீபிகை

சத்தியவர்த்தமானி

ஆகஸ்டு, 1955

மதுரை-ராமநாதபுரம் அத்தியட்சாதீனத் தீபிகை

பத்திராதிபர் :— A. சாமுவேல் ஐயர், செமினரி, பசுமலை,
மதுரை ஜில்லா.

உதவி பத்திராதிபர்:—C. S. தவமணி ஐயர், மண்டபம் கேம்ப்,
ராமநாதபுரம் ஜில்லா.

மானேஜர் :—களம் ஜாஷ்வா அவர்கள், மதுரை-ராமநாதபுரம்,
அத்தியட்சாதீன பொக்கிஷதார்,
211, தெற்கு மாரட் வீதி, மதுரை.

பதிப்பாளர் :—சங்கை C. P. ஹைனமென், லினுக்ஸ் பிரஸ், பசுமலை,
மதுரை ஜில்லா.

முக்கிய பொருளடக்கம்

1. அத்தியட்சரின் கடிதம்
2. செய்தித்திரட்டு
3. இரக்ஷண்ணிய யாத்ரீக விருந்து
4. இளைஞர் ஏடு
5. இயேசுவின் ஜெபப்பள்ளி
6. கி.மு. சங்கப் பொருட்கள்.
7. வேத வினாக்களும விடைகளும்.
8. பந்தயக் கதைப் போட்டிகளின் முடிவு
9. தெய்வ நம்பிக்கை (கட்டுரை)
10. மதிப்புரை.

தென் இந்திய சபையைச் சேர்ந்த
மதுரை—இராமநாதபுரம் அத்தியட்சாதீனத்தின்

சத்திய வர்த்தமானி

புஸ்தகம் XVI   பசுமலை, ஆகஸ்டு 1955   இலக்கம் 10

வருடசந்தா: 1 ரூ. தபாற்கூலி உட்பட.

அத்தியட்சரின் கடிதம்

தல்லாகுளம், மதுரை.

ஜூலை 18, 1955.

கிறிஸ்துவுக்குள் அன்புள்ள மக்களே :—

ஐந்து வருடங்களுக்கு முன் இங்கிலாந்து திருச்சபைக்கும் தென்னிந்திய திருச்சபைக்குமுள்ள சம்பந்தத்தைப்பற்றி ஆலோசித்தபோது தென்னிந்திய திருச்சபையின குருத்துவத்தைப்பற்றிய பொதுவான ஓர் தீர்மானத்திற்கு வரக்கூடாமற்போயிற்று. பெரும்பான்மையோர் சாதகமாக விருந்தாலும் ஓர் முக்கிய சிறுபான்மையோரால் தாமதம் ஏற்பட்டது. ஆக செய்யவேண்டிய தீர்மானம் ஒத்திவைக்கப்பட்டது இந்தமாத ஆரம்பத்தில் இது மறுபடியும் புனராலோசனைக்குக் கொண்டுவரப்பட்டது. தென்னிந்திய திருச்சபையின் அத்தியட்சர்கள், குருமார், மூப்பர், உண்மையான அத்தியட்சர்களாயும், குருமார்களாயும், மூப்பர்களாயும் ஏற்றுக்கொள்ளப்படவேண்டுமென்று ஏகமனதாய்த் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதை சந்தோஷத்துடன் தெரிவிக்கிறேன். இரு சபைகளும் நெருங்கிய தொடர்புடையதாயிருக்கவும, முன்னைய எஸ். பி. ஜி. சபையின் ஆதரவு தொடர்ந்து நடந்தேறவும் தக்க சாதகமான வேறு பல தீர்மானங்களும் இதையொட்டி நிறைவேற்றப்பட்டன. இத்தீர்மானங்கள் நாம் விரும்புகிற அளவின் நிலைக்கு வாராதே போனாலும், இதை முக்கியமான முன்னேற்றத்திற்குரியபடி என்றே கருதவேண்டும். உலகில் திருச்சபை ஐக்கியத்தின் இயக்கம் முன்னேற இதின் பலன் உதவியாயிருக்கும்.

தென்னிந்தியாவிலுள்ள இப்பாகத்தில் கடந்த 28 ஆண்டுகளாகப் பணிவிடை செய்த கனம் போஸன்கெட் அம்மாள் இந்த மாதத்தின் ஆரம்பத்தில் ஓய்வெடுக்கும் நோக்கமாய் இங்கிலாந்து சென்றார்கள். சபை ஐக்கியத்திற்குப்பின் இவர்கள் நமது சபைக்கு

ஆதரவும் பலமுமாய் விளங்கினுர்கள். அவர்கள் எஸ் பி. ஜி. சபையைச் சேர்ந்தவர்களாயிருந்தும, ஐக்கியத்தில் அவர்கள் ஈடுபட்டதை அந்த சங்கத்தார் ஒப்புக்கொள்ளாமலிருந்தும், அவர்கள் முழு மனதோடு ஐக்கியத்தை ஆதரித்தார்கள். அவர்கள் செய்த எல்லாவற்றிற்கும் அவர்களுக்கு நன்றி கூறுகிறோம். அதோடு ஓய்வுகாலத்தில் கடவுளுடைய ஆசீர்வாதம் அவர்களோடிருக்க அவரை வேண்டுகிறோம்.

கடந்த வாரம் பெங்களூரில் நடந்த அத்தியட்சர்கள் கூட்டத்திலும், ஸினுடு நிர்வாகக் கமிற்றிக் கூட்டத்திலும் ஆஜராயிருந்தேன். கிருஷ்ணு—கோதாவரி அத்தியட்சராகக் கனம் எலியட் அவர்களின் நியமுகம் ஊர்ஜிதப்படுத்தப்பட்டது. அவரது கஷ்டமான பணிவிடையில் அவருக்காக ஜெபியுங்கள். தென்னிந்திய திருச்சபையோடு ஐக்கியப்பட விரும்பும் சபைகளோடு சபை ஐக்கியத்தைப்பற்றி ஆலோசிப்பதில் புது முறைகளைக் கையாடவேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது. நமது சபைகளுக்காகக் கடவுள் கொண்டுள்ள விருப்பமென்னவென்பதைத் தாழ்மையோடு யாவரும் கூடிப் பேசவேண்டுமென்பது நமது விருப்பம்.

ஒட்டன்சத்திரம், அறுப்புக்கோட்டை, மண்டபசாலை பாஸ்டரேட்டுகளிலுள்ள நான்கு கூட்டத்தினர்க்கு ஞானதீட்சை கொடுத்தேன். இது ஒரு சந்தோஷ செய்தி. ஆறு மாதங்களுக்கு முன் கல்லிமந்தயம் அருகிலுள்ள வாடிப்பட்டியில் ஞானதீட்சை பெற்ற 40 பேருக்கு திடப்படுத்தல் கொடுத்தேன். பரிசுத்தாவியின் கிரியைகளுக்குரிய இந்த அறிகுறிகள் நமக்கு ஊக்கம் விளைவிக்கிறது

செப்டெம்பர் 28—30உகளில் நடைபெறும் ஆவிக்குரிய கூட்டங்களையும், அதில் பேசவிருக்கும் கனம் செல்வரத்னம் ஐயரவர்களையும் உங்கள் ஜெபங்களில் நினைத்துக்கொள்ளுங்கள். இக் கூட்டங்கள் ஆசீர்வாதமாயிருக்கும்படி சபையார் அனைவரும், ஜெபத்தோடு ஆயத்தமாகும்படி வேவுங்கள்.

கடவுள் உங்களோடிருப்பாராக

இப்படிக்கு,
கிறிஸ்துவுக்குள் உங்களன்புள்ள ஊழியன்,
லெஸ்லி நியூபிகின்,
அத்தியட்சர்.

அத்தியட்சரின் அலுவல்கள்

ஆகஸ்டு	6—7 :	கீழாஞ்சுனை—திடப்படுத்தல்
,,	9—11 :	தரங்கம்பாடி—குருமார் கூட்டம்
,,	13—14 :	கமுதி—திடப்படுத்தல்
,,	15—19 :	அத்தியட்சாதீன நிரந்தரக் கமிற்றிகள்
,,	21—22 :	மல்லங்கிணறு, மூன்றுடைப்பு.
,,	29—30 :	அத்தியட்சாதீன நிருவாகக் கமிற்றி
செப்.	3—5 :	தேவகோட்டை—திடப்படுத்தல்
,,	8—11 :	வேலூர்—தமிழ்நாடு கிறிஸ்தவ சங்கம்.

செய்தித் திரட்டு

1. சபையின் திருநாட்கள்.

செப்.	4	திரி. திரு. பின் ஞாயிறு 14
	11	,, 15 (குஷ்டரோக ஞாயிறு)
	18	திரி. திரு பின் ஞாயிறு 16
	21	பரி. மத்தேயுவின் திருநாள்
	25	திரி. திரு பின் ஞாயிறு 17 (சபை ஐக்கிய ஜெபநாள்)
	21	பரி. மிகாவேல், சகல தேவதூதர் திருநாள்

2. இளைஞர் ஊழியர் அறிக்கை (கனம் ஜூலியஸ்)

மே மாதம் 21, 22-ம் 21-ம் தேதிகளில் கோம்பை சேகரத்தில் எனது ஊழியம் நடைபெற்றது. வாலிப சங்கம் உருவாகவேண்டியதன் அவசியம் வற்புறுத்தப்பட்டது வீடுவீடாக வாலிபர் சந்திக்கப்பட்டு, சங்கம் அமைக்க அழைக்கப்பட்டனர். ஓய்வுநாட் பாடசாலை ஆசிரியர்க்கென விசேஷித்த ஆலோசனைக் கூட்டமும் நடைபெற்றது.

மே மாதம் 28, 29 தேதிகளில் கிளாஞ்சுனை வாலிப சங்கத்தாருக்கு, சங்கம்பற்றி உபன்யாசம் செய்யப்பட்டது. மேலும் சிறுவர்க்கென்று ஒளிவிசித்திரப் படக்காட்சியும் காண்பிக்கப்பட்டது.

ஜூன் 5ம் தேதியன்று மதுரை உவெப் ஞாபகார்த்த ஆலய ஆராதனையில் வாலிபர்க்கென விசேஷித்த பிரசங்கம் செய்யப்பட்டது.

ஜூன் மாதம் 12-ம் தேதியன்று திருமங்கலம் அத்தியக்ஷாதீன வாலிப சங்கத்தாரை சந்தித்தேன். சுவிசேஷ ஊழியத்தில் இச் சங்கத்தார் காண்பிக்கும் விசேஷித்த சிரத்தை பாராட்டத்தக்கது. மேலும் இச்சங்கம் காலாகாலத்தில் தங்கள் ஊழியம்பற்றிய அறிக்கைகளை தலைமை ஸ்தானத்துக்கு அனுப்பி ஏனைய சங்கங்களுக்கு ஓர் முன்மாதிரியாக இருந்து வருகின்றமை கண்டு கடவுளுக்கு நன்றிகூறுகிறேன்.

ஜூன் மாதம் 18—20 தேதிகளில் பெரியகுளம் சென்றிருந்தேன். தண்டுபாளையம் ஞாயிறு ஆராதனை ஓய்வுநாட் பாடசாலை ஆசிரியர்க்கென விசேஷித்த ஆலோசனைக் கூட்டமிவைகளில் பங்கெடுத்தேன்.

மாலையில் கோட்டைமேடு ஓய்வுநாட் பாடசாலையைச் சந்தித்து அதின் ஆசிரியருக்கும் விசேஷித்த ஆலோசனைக் கூட்டம் நடத்தினேன்.

சாயுங்காலம் பெண்கள், வாலிபர் சங்கம் உருவாக முயற்சிகள் எடுக்கப்பட்டன. பெரியகுளம் கனம் டேவிட் அம்மையார் தம் சுய முயற்சியால் ஓய்வுநாட் பாடசாலை ஒன்று நடத்திவருகிறார்கள்.

ஜூன் 25-ம் தேதிமுதல் ஒட்டன்சத்திரம் பாஸ்டரேட்டில் எனது ஊழியம் நடைபெற்றது. கள்ளிமந்தய ஆலய ஆராதனைக்குப் பின் வாலிப சங்கத்தாரைச் சந்தித்தேன். சுவிசேஷ ஊழியமே இச்சங்கத்தாரின் ஜீவநாடி. மாலையில் கி. மு. சங்கத்தார் மத்தியில் ஊழியம் செய்தேன்.

மேலும் 26, 27 தேதி இரவுகளில் மண்டைவாடி, பொருளூர் சிறுவர்க்கென ஒளி விசித்திரப் படக்காட்சிகள் காண்பிக்கப்பட்டது.

28-ம் தேதி ஒட்டன்சத்திரம் கி. மு. சங்கத்தாரையும் ஓய்வுநாட் பாடசாலை மாணவரையும் சந்தித்து ஆசிரியருக்கு ஆலோசனை கூறினேன். சிறுவருக்கு ஒளி விசித்திரப் படக்காட்சியும் காண்பிக்கப்பட்டது.

மேலும் ஜூன் 12 தேதியன்று திருமங்கலம் C. S. I. பாடசாலையைச் சேர்ந்த ஓய்வுநாட்பாடசாலை மாணவரையும் ஆசிரியரையும் சந்தித்தேன்.

சிறுவர் நேசராயும், வாலிபராயும் ஊழியம் செய்த அவருக்கே சகல மேன்மையும் கனமும் சதாகாலங்களிலும் உண்டாவதாக.

3. முக்கிய உலக சம்பவங்கள்

(கனம் இ. இ. உவைட் ஐயரவர்கள்.)

புதுடேல்லி. இந்தியாவின் பிரதமர் கனம் ஜவர்ஹலால் நேரு அவர்கள் கடந்த சில வாரங்களாக ஐரோப்பிய நாடுகளிலும், முக்கியமாய் சோவியத் யூனியனிலும் சுற்றுப்பிரயாணம் செய்து சுய நாடு திரும்பியுள்ளார் சில தினங்களில் ஆயிரக்கணக்கான மைல் பிரயாணம் செய்யவேண்டியதிருந்தது. புகழ்வாய்ந்த இந்த ராஜ தந்திரியைப்பற்றி இந்தியராகிய நமக்குப் பெருமை. உலகத்திலுள்ள சகல தேசங்களும் ஒற்றுமையாயும் சமாதானமாயும் வாழ வேண்டுமென்பதற்காகவே இவர் அரும் பெரும் பிரயாசம் எடுத்து வருகிறார்.

ஜெனிவா. சுவிட்சர்லாந்திலுள்ள ஜெனிவா என்னும் நகரில் ஜூலை மீ 18-ம் உ முதல் முக்கிய சாம்ராஜ்யங்களான அமெரிக்கா, பிரான்சு, ருஷியா, கிரேட்பிரிட்டன் ஆகியவற்றின் தலைவர்களும் சகாக்களும் யுத்த பீதியை நீக்கவும், நிரந்தர சமாதானம் உண்டாகும் வழிகளை வகுக்கவும் ஆலோசித்து வருகிறார்கள். இதன் பயனாய் நல்ல சித்தி கிட்டும்படி உலகனைத்தும் உள்ள கிறிஸ்தவர்கள் ஜெபித்துவருகிறார்கள். சிநேகபாந்துவமாகவே இக்கூட்டம் ஆரம்பித்துள்ளது. ஞாயிறு ஆராதனைகளிலும், வாரக் கூட்டங்களிலும் கிறிஸ்தவர் அனைவரும இதை நினைத்து ஜெபிப்பார்களாக.

அணுக்குண்டு அணுக்குண்டும், ஜலவாயுக்குண்டும் யுத்த ஆயுதங்களைக் காட்டிலும் ஆயிரக்கணக்கான மடங்கு சேதம் விளைவிக்கக்கூடியவை. இவற்றை உபயோகிப்பதால் பூமியிலுள்ள ஜீவராசிகளே அற்றுப்போகும். ஆகையால் இவ்வுலகிலுள்ள பிரபலம் வாய்ந்த ரசாயன சாஸ்திரிகள் பலர் தாக்கீது ஒன்று தயாரித்து அதை முக்கியமான தேசங்களின் தலைவர்களுக்கனுப்பி எச்சரிக்கை விடுத்திருக்கிறார்கள். தேசங்களுக்குள்ளும் ஜாதிகளுக்குள்ளும் நேரிடும் அபிப்பிராய பேதங்களை சமாதானமுறையில் தீர்த்துக் கொள்ளவேண்டுமே யொழிய யுத்தத்தைக் கையாடுவது மனுமக்களின் அழிவுக்கே காரணமாகும் என்பது அவர்களின் கருத்து.

4 திருச்சபை வளர்ச்சி திட்டத்தில் முதியோர் கல்வி

(மு கோபாலகிருஷ்ணன், செயலாளர்.)

மக்களின் இகபர வாழ்விற்கு இன்றியமையாத சாதனங்கள் கடவுளிடத்தில் ஆழ்ந்த பக்தியும், அவரின் மகத்துவத்தை அறிந்து தெளிதலும், அவருடைய சிருஷ்டிப்பின் அதிசயம், இரகசியம்

உலகில் மக்களுடைய பொறுப்புகளை உணர்ந்து ஒருவர் மற்றெல்லாருக்காகவும் மற்றெல்லாரும் ஒருவருக்காகவும் பயன்படும்படி உய்யச்செய்வதேயாகும்.

இந்த முதியோர் கல்வி பொதுவாக எழுதப்படிக்கத் தெரியாதவர்களுக்கு எழுத்தறிவிப்பில் அபிவிருத்தியுண்டாகச் செய்வதென்று பொதுமக்கள் நினைக்கிறார்கள். அது சரியல்ல. துரதிருஷ்ட வசமாக நூற்றில் 85 பேருக்கு எழுதப்படிக்கத் தெரியாமலும் இந்நாட்டில் எழுத்தறிவிப்பும முதியோர் கல்வித்திட்டத்தில் முக்கிய இடம் பெறுவது அவசியமே. வேதம் வாசிக்க இயலாத அங்கங்களையுடைய திருச்சபை அந்தக் களங்கத்தை நீக்க துரிதமாய் வழிசெய்யவில்லையேல் தன் முக்கிய கடமைகள் ஒன்றில் தவறிவிட்டதென்றே சொல்லலாம்.

ஆயிரக்கணக்கான நமது கிராமமக்கள் அறிவிலிகளல்ல. எழுத்து வாசனையற்றிருந்த போதிலும் பண்பட்ட மனம் படைத்தவர்கள். விவசாயம், கைத்தொழில் முறைகள், சுகாதாரம், வாணிபம் முதலிய பல துறைகளிலும் அனுபவஞானம் பெற்றவர்கள். ஆகவே, கிறிஸ்துவின் திருச்சபைக்குத் திரண்டுவரும் சபையாருக்கு செல்வாக்குள்ளவர்கள் தக்கது செய்யக் கடமைப்பட்டிருக்கின்றனர்.

பண்டைய காலத்தில் நமது நாட்டில் பாமர மக்கள் ஞானோபதேசம் பெற கையாண்ட பகவத்காலக்ஷேபமுறை, பஜனையோடு ஊர்வலங்கள், தெருக்கூத்துகள், தனித்தாட்கள் ஸ்தோத்திரப் பாடல்கள், பக்தி அபிவிருத்திக்கேதுவான கதைகள் சொல்லல் முதலிய முறைகளை சபைகள் பின்பற்றவேண்டும். இதேபோன்று உலக வாழ்க்கைக்கு அவசியமான சுகாதாரம், தாய்ப்பேறு, சிசு வளர்ப்பு பிள்ளைகளின் பராமரிப்பு, பூகோளம், தேச சரித்திரம், இன்னம் பரிபூரண வாழ்க்கைக்கு அவசியமான போதனைகளையும், இதோடு இணைத்துக்கொள்ளவேண்டும். கைத்தொழில் சாலைகள், சிலம்பக் கூடங்கள், சங்கீத காலக்ஷேப முறைகளை கற்கும் நிலையங்கள், வாணிபத்தில் சிறக்க வழிகாட்டும் கல்வித்திட்டங்கள், கலா மண்டப நிர்மாணங்கள் யாவும சமுதாயக் கல்வி திட்டத்தின் அம்சங்களாகும்.

திருச்சபைகள் தமிழ் நாட்டுக் கிறிஸ்தவ கௌன்சிலை ஒட்டி ஒரு சங்கீதப் பாடசாலை மேற்கண்ட பயிற்சி முறைகளைப் பரப்பிறுவச் செய்வது தாமதமின்றி செய்யவேண்டிய ஓர் பணி. இவ்விதமாக பயிற்சி செய்விக்கப்பட்ட வாலிபர்கள் கிராமங்களில் சேவை செய்யலாம்.

சபையோர் தேகபலனும், மனோதிட்பமும், ஆத்தும சுகமும் பெற்று வெற்றிவீரராய் சாந்த சொரூபியான இயேசுபிரானின் திருத்தொண்டர்களாய் திருச்சபையின் சுய ஆதரிப்பிற்கும், பரம இராஜ்யம் பரம்புவதற்கு அனுகூலமானவர்களாயும விளங்க வேண்டுவன செய்ய கர்த்தர்தாமே அருள்புரிவாராக.

ரட்சணிய யாத்திரிக விருந்து.

(ஸ்ரீ வீ. ப. கா. சுந்தரம், வித்வான், பசுமலை.)

நான் யார் ?

வாழ்வில் ஒரு நோக்கம் வேண்டும்; ஒரு ஆசைவேண்டும்; ஒரு குறிக்கோள் வேண்டும். நோக்கமில்லாத வாழ்வு வாழ்வாகுமோ கண்டது காட்சி கொண்டது கொள்கை என்ற சுற்றித்திரிவது இன்பயாகுமா? முடிவு வருந்தத்தக்கதாகும். ஆகவே உயர்ந்த எண்ணங்களும் நோக்கங்களும் உள்ளத்தில் ஊற்றெடுக்கவேண்டும். உண்பதும் உறங்குவதும் உடுப்பதும் அனைவர்க்கும் பொதுவாகும். சிறப்பை அளிப்பது சீரிய எண்ணமே.

ஆகவே ஆன்மீகக் கவலைகள் வேண்டும் நமக்கு விரும்புகின்ற 'நான்' யார்? என் இங்கு வாழ்கின்றேன். என்வாழ்வில் பல நன்மைகளைப் பொழிந்து காத்துவருகின்ற கடவுட்கு என்கடமைகள் என்ன? நான் என்ன நன்மைகள் செய்தேன்? என்ன தீமைகள் செய்தேன்? எனக்குக் கிடைக்கக் கூடிய கதி என்ன?— என்னும் இத்தகைய எண்ணங்களும் கவலைகளும் கொள்ளாது நோக்கமின்றித் திரியும் மாந்தர் உள்ளனர். அவர்தம் ஜென்மமும் ஜென்மமாமோ? என்ற வினவை மகாவித்துவான், கிருஷ்ணபிள்ளை கேட்கின்றார் ரட்சணிய யாத்திரிகத்திலே.

இதோ செய்யுள் :—

நந்துநான் யாரேன் இங்கு நாடினேன், நலமே நல்கி
இந்தமட்டும் என்னைப்புரந்தகற்(கு)என்கடன், யாவென்செய்தேன்,
வந்திடுங் கதிஎன் என்று மாவிசா ரஞ்செய் யாது
சிந்தையற் றுழலு மாந்தர் ஜென்மமும் ஜென்ம மாமோ.

இச்செயுளிலுள்ள கடின சொல் விளக்கம் :—

நந்து = விரும்புகின்ற. யார் × என் = யாரேன் நல்கி = கொடுத்து. புரந்தாற்கு = காத்த கடவுட்கு. விசாரம் = ஆராய்ச்சி. உழலும் = துன்புற்றுத் திரியும்.

பக்தியின் பாதையில் செல்ல விரும்புவோர்க்கு இத்தகைய எண்ணங்கள் இருதயத்தில் ஊறவேண்டும். நோக்கமற்ற ஜீவியம் சுவை பயக்காது. நான் எங்கிருந்து வந்தேன்? எதற்காக வாழ்கிறேன்? என்ன நலன்கள் செய்யப் போகிறேன்? நன்மை செய்ய இறைவனிடம் ஒத்தாசை எங்ஙனம் பெறுவேன்? என்ற சிந்தனைகள் தூண்டவேண்டும் இச்சிந்தனைகள் தீமையினின்றும் நம்மைப் பிரித்து நல்வழிப்படுத்தும்.

வீ. ப. கா. சு.
பசுமலை.

வேத வினாக்களுக்குரிய விடைகள்.

1. *யாத்.* 12 : 5
2. 120-134 *சங்கீதங்கள் யாத்ரீகர் எருசலேமுக்குப் போகும் போது பாடிக்கொண்டுபோகும் சங்கீதங்கள்.*
3. *லேவி.* 19 : 13
4. *எண்.* 15 : 37-40
5. *புளிப்பில்லா அப்பப்பண்டிகை—யாத்.* 12 : 17-20
6. *ஆதி.* 14 : 18-20
7. I *சாமு.* 11 : 1-11
8. *யாக்கோபு* 2 : 8
9. *எபேசியர்*
10. *வெளி.* 2 : 17

இளைஞர் ஏடு

உங்கள் வினாக்கட்கு விடைகள்

திரு. வி. ஜெயராஜ், B.A., L.Th., கிறிஸ்தவ இலக்கியத்
தனி அலுவலாளர், பசுமலை

வாலிபரால் எந்த நாடும் — இந்த
மாநிலத்தில் என்றும் மாண்புறக் கூடும்
சீலமிகும் இந்தச் சிந்தையினோடும் — இன்று
தீட்டினோம் இளைஞர்க்காய் இச்சிறு ஏடும்.

(2) மனிதன் பேசக்கற்ற பின்னரே 'கடவுள்' என்ற சொல் தோன்றிற்று. எனவே கடவுள் மனித கற்பனையல்லவா?

'கடவுள்' என்ற சொல்மட்டுமன்று, அகராதியிற் காணப்படும் எல்லாச் சொற்களுமே மனிதன் பேசக் கற்றபின்னரே தோன்றின. கருத்தை வெளியிடும் வாகனமே சொல். காட்சிப் பொருளாவது, கருத்துப் பொருளாவது இல்லாவிடில் கருத்தில்லை. கருத்தில்லாவிடில் சொல் இல்லை. 'எலக்ட்ரான்' என்ற சொல் இந்த நூற்றாண்டில்தான் வழங்கப்படுகிறது. இவ்வாதத்தின்படி 'எலக்ட்ரான்' என்பதே உலகில் இல்லை என்றும் அதுவும் மனித கற்பனையென்றுமாகும். "எலக்ட்ரானை' மனித கற்பனை என்று பகுத்தறிவுள்ள எவனும் சொல்லமாட்டான். ஆதலால் பேசக் கற்றபின் 'கடவுள்' என்ற சொல் வந்ததால் 'கடவுள்' இல்லை என்று பொருள்படாது; மனிதகற்பனையுமாகாது.

(3) அறியாமையும் அச்சமும் பெற்ற பிள்ளையல்லவா சமயம்?

அறியாமை:

"ஆயகலைகள் அறுபத்துநான்கி"ற்கும் பிறவற்றிற்கும் தாய் சமயமே கல்வி, நூற்கள், நூல் நிலையங்கள் தோன்றக் காரணமாயிருந்தது சமயமே. பண்டைய எகிப்திய பூசாரிகளே மருத்துவராகவுமிருந்தனர். கிரேக்க தெய்வங்களுள் ஒன்றான எஸ்குலாபியஸ் என்பது மருத்துவ தேவன். மறுமையுண்டென்று நம்பியதால் செத்த அரசர் உடலங்கட்குத் தைலம் பூசினர். மருத்துவத்தில் பூசாரிகள் கையாண்ட தாவரங்கள் தாவர ஆராய்ச்சிக் கடிகோலின. உயிர்த்தெழுதல் உண்டென்று நம்பியே எகிப்திய மன்னருள் செத்த அரசருக்குப் பிரமிட்கோபுரங்கள் நிறுவினர். சமய காரணமாகவே சிற்பக்கலை, ஓவியக்கலை காவியக்கலை உருவாயின. விக்கிரகங்களை உருவாக்கினதிலிருந்து சிற்பக்கலை தோன்றிற்று. பண்டைய மக்களின் வான்வழிபாடே வான்கலைக்கடிகோலிற்று. பூதேவி வழிபாடே பூமி சாத்திரத்திற் கடிகோலிற்று. எண்ணில், மாந்திரீக சக்தியுண்டென்ற மூட நம்பிக்கையிலிருந்தே கணிதக் கலை உருவாயிற்று. 1 பகுத்தறிவு எண் என்றும் 2 ஆண் எண் என்றும் 3 பெண் எண் என்றும் 2ம் 3ம் சேர்ந்த 5 விவாக எண் என்றும், அகவுலகையும் புற உலகையும் எண்களால் அறியலாம் என்றும் பிரஞ்சு நாட்டுப் பிதாக்கோரியர் நம்பினர். சமயமே தரும சாத்திரத்தின் தாயகம்-சமயமே அறிவின் சிகரமாகிய தத்துவ சித்திரத்தின் நாயகம்-சமயமே பொதுவுடைமைக்கும் தாய். உலகில்

சகல மொழிகளிலுமுள்ள உயரிய இலக்கியங்களுக்கெல்லாம் தாய் சமயமே. மில்டனின் பாரகாவியமும், காளிதாசனின் குமாரசம்பவம் என்ற வீர காவியமும், திருத்தக்கத் தேவரின் சீவக சிந்தாமணியும, சீத்தலைச் சாத்தனாரின் மணிமேகலையும், வால்மீகி கம்பன் ஆகியோரின் இராமாயணமும், கிருஷ்ணபிள்ளையின் இரக்ஷண்ய யாத்ரீகமும், வீரமாமுனிவரின் தேம்பாவணியும், வியாசரின் மகாபாரதமும், பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணமும், தேவாரம், திருவாசகம், திருப்புகழ், சிந்து, நாலாயிரத்திவ்யப் பிரபந்த முதலியனவும் தோன்றக் காரணம் சமயமே-பீதஹோவன், தியாகராஜர் இயற்றிய இசைக்கலையும் இறைவழிபாட்டால் வந்தது-பரத நாட்டியமும் நாடகமும், கும்மி, கோலாட்டமும் அப்படியே தோன்றின! இக் கலைகளை யீந்த சமயம் அறியாமையின் பிள்ளையா ? அச்சம்.

பௌத்தர்கள் சமயத்தைப் பரப்பவே இமயத்தைக் கடந்தார். 15ம் நூற்றாண்டுவரை பூமி தட்டை வடிவமென்று நினைத்து மேலை நாட்டினர் நெடுந்தூரக் கப்பற்பிரயாணம் செய்யாத காலத்தில் புத்த பிக்ஷுக்கள் சமய காரணமாகக் கடலையும் தாண்டினார்-இது ஆண்மையா ? அச்சமா ? 'மனிதருக்குக் கீழ்ப்படிவதிலும கடவுளுக்கே கீழ்ப்படிய வேண்டும்' என்று வீர கர்ஜனை செய்தனர் பேதுருவும் யோவானும் ஆளும் வர்க்கத்தினரை எதிர்த்து, இது ஆண்மையா ? அச்சமா ? சீரிய தானிவேல் வீரிய சிங்கமுன் நிற்கவும், தீயிற் குளிக்கவும் சித்தமாயிருந்தது ஆண்மையா ? அச்சமா ? ஆரும அறியா அந்தகாரக் கண்டத்திற்குச் சமயகாரணமாக வழி வகுத்த டேவிட் லிவிங்ஸ்டன் செயல் ஆண்மையா ? அச்சமா ? ஜோன் ஆவ் ஆர்க்கின் தீரமும், சாக்ரட்டிஸின் வீரமும் ஆண்மையா ? அச்சமா ? தீயிலே சிங்கத்தின் வாயிலே, நீரிலே, நெருப்பிலே, கொதிக்கும் நெய்யிலே, தீயர் கையிலே சமய காரணமாக உயிர் நீத்தவர் செயல் ஆண்மையா ? அச்சமா ? ஏசாயா முதல் ஜாண்ஹஸ் ஜாண்வைகிளிவ் வரையிருந்தவரும், ஜியார்ஜ் பாக்ஸ் முதல் டால்ஸ்டாய்வரை சமயப்பணி செய்த மகான்களின் செயல் தைரியமா ? பயமா ?

எனமே சமயம் அறியாமையும் அச்சமும் பெற்ற பிள்ளையன்று. அது ஆண்மையின் சிகரம். அன்பின் வண்மை என்பதுவே உண்மை. சமயம் உலகினுக்களித்த முப்பெருங் கனிகள் மூன்று அவை தைரியம், பகுத்தறிவு, அன்பு எனபனவாம்.

(4) ஆகானின் குற்றத்திற்காக யாதொரு குற்றமும் செய்யாத அவன் குடும்பத்தாரையும், அவன் ஆடுமாடுகளையும் கருணையுள்ள பரமபிதா அழித்தது எவ்வகையில் நியாயம் ? (யோசுவா 7 : 24)

இக்கேள்வி இங்கர்சாலிடமிருந்து இரவல் வாங்கின கேள்வி. ஈனினும் விடை தருகிறோம். இங்கர்சால்தான் சரித்திர மனப்பான்மை யில்லாது தவித்தாரென்றால், சரித்திரபாட போதனையில், சரித்திர மனப்பான்மை என்ற தலைப்பைப்பற்றிப்படித்திருந்தும் அதனை மறந்து இவ்வாசிரிய மாணவர் இவ்வினாவைக் கேட்டிருக்கின்றார். ஒரு நிகழ்ச்சியைப்பற்றி முடிவுசெய்யவேண்டுமானால் அந்நிகழ்ச்சி நடந்த காலம், அக்காலத்திய கலாச்சாரம், மக்களின் கருத்து முதிர்ச்சி முதலியவற்றை-வைத்தே முடிவு செய்யவேண்டும் நிற்க.

தொன்று தொட்டு இன்று மட்டும் கடவுளைப்பற்றி மக்கள் கொண்ட கருத்து வளர்ந்து கொண்டே வருகிறது. அன்றிருந்த கடவுள்தான் இன்றும் இருக்கின்றார் இருந்தவருமல்ல, இருக்கப் போகிறவருமல்ல, இருக்கிறவர் என்பதே அவர் பெயர்-பழைய ஏற்பாட்டுக் கடவுள்தான் இயேசுநாதர் வெளிப்படுத்திய பரமதந்தை, கருணாநிதி. அவர் என்று மாறாதவர். ஆனால் மக்களின் கடவுளைப் பற்றிய அறிவு முதிராத காலத்தில் கடவுளைப் பற்றித்தவறான கருத்துக்கள் கொண்டிருந்தமையால் ஆகான் வரலாற்றை அவ்வாறு எழுதி வைத்தான். ஆகான் காலத்திய மக்கள் நாடோடிகளாயிருந்தனர். தனியாளைப் பார்க்கிலும் அக்காலத்தில் குலங்கோத்திரமே பெரிதாகக் கருதப்பட்டது. எனவே ஆகான் பிழை அவன் குடும்பத்தார் பிழை என்று கருதப்பட்டது. அதனால் அவனை மட்டுமல்லாது அவன் குடும்பத்தையும் அவன் ஆடுமாடுகளையும் அறியாமை காரணமாக அழித்தனர். கடவுளுக்கும் அந்நிகழ்ச்சிக்கும் சம்பந்தமில்லை.

ஆனால் பாபிலோனியச் சிறையிருப்பின்போது இவ்விதம ஒருவர் குற்றத்திற்காகப் பிறரைத் தண்டிப்பது நீதியன்று என்று மக்கள் அறிந்தனர். எனவே அதே பழைய ஏற்பாட்டில், எரேமியா, எசேக்கியேல் தீர்க்கதரிசன ஆகமங்களில் அத்தவறான கருத்து திருத்தப்பட்டது. "பிதாக்கள் திராட்சைக் காய்களைத் தின்றார்கள். பிள்ளைகளின் பற்கள் கூசிப்போயின என்று அந்நாட்களில் சொல்ல மாட்டார்கள். அவனவன் தன்தன் அக்கிரமத்தினிமித்தமே சாவான், எந்த மனுஷன் திராட்சைக்காய்களைத் தின்பானோ அவனுடைய பற்களே கூசிப்போகும்" (எரே. 31 : 29-30) "பாவஞ் செய்கிற ஆத்துமாவே சாகும். குமாரன் தகப்பனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதில்லை, தகப்பன் குமாரனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதில்லை. நீதிமானுடைய நீதி அவன்மேல்தான் இருக்கும். துன்மார்க்கனுடைய துன்மார்க்கமும் அவன்மேல்தான் இருக்கும்" (எசேக்கியேல் 18 : 20)

மேலும் பழைய ஏற்பாட்டுக்குத் திறவுகோல் இயேசுகிறிஸ்துவே. பழைய ஏற்பாட்டின் சிக்கலான பிரச்சினைகளுக்கு விடையும்

அவரே. கடவுளைப்பற்றிய பூரண வெளிப்படுத்துதல் இயேசு கிறிஸ்து விலேயே நிறைவேறிற்று என்பதற்காதாரமாக எபிரேயர் 1 : 1ஐத் தியானிக்கவும்.

இதனையொத்த இன்னொரு கேள்வி ஒன்று கேட்கப்பட்டிருக்கிறது. அதாவது "கொலைசெய்யாதிருப்பாயாக" என்று பிரமாணம் தந்த கடவுளே, யோசுவாவின் ஆகமத்தில் கொலை செய்யத் தூண்டுகிறாரே ? இது எப்படி ? இவ்வினாவிற்கும் இன்னும் 2 சாமு. 21 : 6ல் கண்ட வரலாற்றிறகும், மேலே கண்ட விடையிலிருந்தே விளக்கம் காண்க.

இயேசுவின் ஜெபப்பள்ளி

இருபத்திரண்டாம் பாடம்.

'உங்களில் என் வார்த்தைகள்'

அல்லது

வேத வாசிப்பும் ஜெபமும்

"நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்" யோவான் (15 : 7)

வேதவாசிப்பும் ஜெபமும் கிறிஸ்தவ வாழ்க்கைக்கு மகா முக்கியம். நான் ஜெபிக்கும்போது நான் என் பரமதந்தையோடு பேசுகிறேன். "நான் வேதத்தை வாசிக்கும்போது பிதா என்னோடு பேசுகிறார்" என்று ஒரு பக்தன் சொன்னார். ஜெபிப்பதற்கு முன், கடவுளுடைய வார்த்தைகளே நம்மை ஜெபத்திற்கு ஆயத்தப்படுத்துகின்றன. நாம் கேட்கவேண்டியது என்ன என்பதை வெளிப்படுத்துகின்றன. கடவுளுடைய வார்த்தையே, ஜெபத்தில் விசுவாசம் வைக்க நம்மைப் பலப்படுத்துகிறது. ஜெபத்திற்குப்பின் கடவுளுடைய வார்த்தையே நம் ஜெபத்திற்கு விடை கொண்டுவருகிறது. எப்படியெனில், கடவுள் வார்த்தையில் பிதாவின் சத்தத்தைக் கேட்க ஆவி உதவிசெய்கிறது. ஜெபம் தானாகப் பேசிக்கொள்வதன்று. அது ஆண்டவனுக்கும் அடியானுக்குமுள்ள உரையாடல், அவ்வுரையாடலின் முக்கிய பகுதி கடவுள் சத்தத்தை நாம் கேட்பதேயாம். கடவுள் சத்தத்திறகு நாம் செவிகொடுப்பது, நமது சத்தத்திற்குக் கடவுள் செவிகொடுக்கிறார் என்பதற்கு உறுதி 'எனக்குச் செவிகொடுங்கள்' என்பதே கடவுள் மனிதனோடும் மனிதன் கடவு

ளோடும் பேசும் சொற்கள். அவர் செவிகொடுப்பது நம்மைப் பொருத்தே இருக்கிறது. எவ்வளவாய் அவரது திருவசனம் நம்மில் கிரியை செய்கிறதோ அவ்வளவாய் நமது வார்த்தைகளுக்கு வல்லமை இருக்கும். கடவுள் நம்மோடிருக்கிறார் என்பதற்கு அறிகுறி கடவுளுடைய வார்த்தையை நாம் எவ்வளவு மதிக்கிறோம் என்பதும் நமது விண்ணப்பத்தின் நேர்மையுமே ஆகும்.

வேத வாசிப்புக்கும் ஜெபத்திற்குமுள்ள இந்தத் தொடர்பைத் தான் ஆண்டவர் நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால் நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்' என்ற வசனத்தின் மூலம் சுட்டிக்காட்டுகின்றார். இந்தச் சத்தியத்தின் முக்கியம் யோவான் 14 : 20ல் வரும் ' நீங்கள் என்னிலும் நான் உங்களிலும்' என்ற சொற்றொடரில் தெளிவாய் விளங்கும்- நாம் அவரில் நிலைத்திருப்பதால் வரும் கிரீடமே அவர் நம்மில் நிலைத்திருப்பது. ஆனால் இங்கே, ' நீங்கள் என்னிலும் நான் உங்களிலும்' என்பதற்குப் பதிலாக " நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும" என்று கூறுகிறார்? அவருடைய வார்த்தைகள் நம்மில் நிலைப்பது அவரே நம்மில் நிலைப்பதற்குச் சமம்.

கிறிஸ்துவுக்குள் கடவுளுடைய வார்த்தைகள் நமது ஆன்ம வாழ்விற்கும், நமது ஜெபத்திற்கும் எத்தனை மகத்துவமானவை! நமது வார்த்தைகளின் மூலமாகவே ஆவியோடு ஆவி ஐக்கியப்படுகிறது. கடவுளுக்குள் எல்லாம் ஜீவன், வல்லமை, ஆவி, சத்தியம். கடவுள் தமது வார்த்தைகள் மூலம் பேசும்போது, அவரை, அவரது அன்பை, அவரது ஜீவனை, அவரது சித்தத்தை, அவரது வல்லமையை அவ்வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளுகிறவர்களுக்கு அருளுகிறார். கடவுளுடைய ஒவ்வொரு வாக்குத்தத்தத்திலும் நாம அவரைப்பற்றிக் கொள்ளவும், அவரை நமக்கு உரிமையாக்கிக்கொள்ளவும் இடம் தருகிறார். கடவுளுடைய ஒவ்வொரு கட்டளையிலும், அவரோடும், அவரது சித்தத்திலும், அவரது பரிசுத்தத்திலும், அவரது சம்பூரணத் தன்மையிலும் நாம பங்குபெறும் சாதகியம அருளுகிறார். கடவுள் தமது வார்த்தைகளில் தமமையே நமக்குத் தருகிறார். கிறிஸ்து இயேசுவாகிய நித்திய சுதனே அவ்வார்த்தை. ஜீவனும் வல்லமையுமுள்ள கிறிஸ்துவின் வார்த்தைகள் அனைத்தும் கடவுளுடைய வார்த்தைகளே " நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனுமிருக்கிறது ".

(யோவான் 6 : 63)

பேசும் சக்திக்கு கேட்கும் சக்தி மிக முக்கியம் என்று ஊமையும் செவிடுமானவரைப்பற்றி ஆராய்ச்சி செய்தவர் கூறுகின்றனர். பேசும் சக்தி கேட்கும் சக்தியைப் பொருத்ததாம். கேட்கும்

சக்தியையிழந்த சிறுவருக்குப் பேசும் சக்தியும் மறைகிறதாம். எனவே நாம் கேட்பதையே பேசுகிறோம். கடவுளோடு நாம் உரையாடுவதிலேயும் இது உண்மை. ஜெபிப்பதும், விருப்பங்களைத் தெரிவிப்பதும், சில வாக்குத்தத்தங்களை நிறைவேற்ற விண்ணப்பம் செய்வதும் சுலபம். இவற்றை மனித அறிவால் நாம் பெறமுடியும் ஆனால், ஆவிக்குள் ஜெபிக்கவும், கடவுளை அணுகி அவரைத் தொடத்தக்க வார்த்தைகளைப் பேசவும், காணு உலகின் வல்லமைகள் மீது செல்வாக்குச் செய்யும் வார்த்தைகளைப் பேசவும், கடவுள் சத்தத்திற்குச் செவிகொடுத்தால் மட்டுமே முடியும். கடவுள் பேசுகிற பாஷைக்கும், சத்தத்திற்கும் எவ்வளவு செவிகொடுக்கிறோமோ, அவருடைய வார்த்தைகளில் அவரது கருத்துக்களையும, அவரது சிந்தையையும், அவரது ஜீவனையும், எவ்வளவு நம்முடைய இருதயங்களில் ஏற்றுக்கொள்ளுகிறோமோ, அவ்வளவாய் கடவுள் கேட்கத்தக்க பாஷையிலும், சத்தத்திலும் பேசக் கற்றுக்கொள்ளுவோம். 'இளைப்படைந்தவனுக்கு சமயத்திற்கேற்ற வார்த்தை சொல்ல நான் அறியும்படிக்கு, கர்த்தராகிய ஆண்டவர் எனக்குக் கல்விமானின் நாவைத் தந்தருளினர். காலைதோறும் என்னை எழுப்புகிறார்; கற்றுக்கொள்ளுகிறவர்களைப்போல, நான் கேட்கும்படி என் செவியைக் கவனிக்கச் செய்கிறார் (ஏசா. 50 : 4) இதன்படி காலைதோறும் எழுப்பப்படும் கற்றுக்கொள்ளுகிறவன் காதே, கடவுளிடத்திலும், மனிதரிடத்திலும் எப்படிபபேசவேண்டுமோ அப்படிப் பேச அவன் நாவை ஆயத்தம் செய்கிறது.

வேதம் வாசித்துத் தியானிப்பதிலும், கடவுள் சத்தத்தைக் கேட்பதே சிறந்தது. வேதவாசிப்பு வேத அறிவைப் பெருக்கலாம். ஆனல் அதனல்மட்டும் ஜீவனுள்ள தேவனோடு ஐக்கியப்படுவது அசாத்தியம். ஆயினும் பிதாவின் சமுகத்திலே, பரிசுத்த ஆவியின் நடத்துதலிலே, வேதத்தை வாசிக்கும்போது, கடவுளிடமிருந்து உயிருள்ள வல்லமை அவ்வார்த்தைகள் மூலம் கிடைக்கிறது. அப்போதுதான் அது பிதாவின் சத்தம். அப்போதுதான் அவரோடு ஐக்கியப்படுகிறோம் ஜீவனுள்ள தேவனின் சத்தமே நமது இருதயங்களில் பிரவேசிக்கிறது. அதுவே ஆசீர்வாதத்தையும், பலத்தையும் கொண்டுவருகிறது. அதுவே நமக்குள் உயிருள்ள விசுவாசத்தை எழுப்புகிறது. அதுவே கடவுளிடம் மீண்டும் சேருகிறது.

கீழ்ப்படிய, விசுவாசிக்கவேண்டிய சக்தி கடவுள் சத்தத்திற்குச் செவிகொடுப்பதில்தான் இருக்கிறது. நாம் செய்யவேண்டியதைப்பற்றிக் கடவுள் என்ன சொல்லியிருக்கிறார் என்றறிவது முக்கியம் அன்று. கடவுளோ நமக்கு என்ன சொல்லுகிறார் என்றறிவதே முக்கியம். வேதமுமன்று, எது சரி எது தவறு என்ற அறிவுமன்று. கடவுளின் நேர்முக செல்வாக்கும் அவரோடு கொள்

ளும் உயிருள்ள ஐக்கியமே இன்றியமையாதது ஜெபத்தில் நம்பிக்கையையும் விசுவாசத்தையும் தூண்டுவது, கடவுளின் வாக்குத்தத்தங்களைப்பற்றிய அறிவுமன்று, அவ்வாறு வாக்குத்தத்தம் செய்த கடவுள், தாமே பிரசன்னமாயிருப்பதே அவற்றை எழுப்பும். கடவுள் தம் முழுப்பிரசன்னமே நமது அவிசுவாசத்தையும் கீழ்ப்படியாமையையும் நீக்கும்.

'நீங்கள் என்னிலும் என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால் நீங்கள் கேட்பதெதுவோ, அது உங்களுக்குச் செய்யப்படும்' என்பதன் கருத்தை இப்பொழுது அறிகிறோம். தமது வார்த்தைகளில் ஆண்டவர் தம்மையே கொடுக்கிறார். அவருடைய வார்த்தைகளை நமது சித்தத்திலும் ஜீவியத்திலும் ஏற்றுக்கொண்டு அவற்றை நமது குணத்திலும் நடத்தையிலும் வெளியிடவேண்டும். அவை நம்மில் நிலைபெறவேண்டும். அவை நம்மில் நிறைந்து நமது முழு வாழ்க்கையிலும் வெளிப்படவேண்டும். அவை கிறிஸ்துவை நமதுள்ளத்தில் வெளியிடவேண்டும். நமது ஜீவியம் கிறிஸ்துவைப் புறத்தே வெளியிடவேண்டும, அவருடைய வார்த்தைகள் நமது இருதயங்களில் புகுந்து எப்படி நமது வாழ்க்கையாகி அதன் மீது செல்வாக்குச் செய்கிறதோ அப்படியே நமது வார்த்தைகளும் அவரது இருதயத்தில் புகுந்து அவர் மீது செல்வாக்குச் செய்யும். நம் வாழ்க்கையைப்பொருத்தே நம் ஜெபம் இருக்கும். கடவுளுடைய வார்த்தைகள் நமக்கு, நமக்குள் எப்படிக் கிரியை செய்கின்றனவோ, அப்படியே நமது வார்த்தைகள் கடவுளுக்குள் கிரியை செய்யும். கடவுள் சொல்கிறபடி நாம் செய்தால், நாம் சொல்கிறபடி கடவுள் செய்வார்.

பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள் கடவுளுடைய வார்த்தைக்கும் நம் வார்த்தைக்கும் உள்ள தொடர்பை நன்கறிந்து ஜெபித்தனர். அவ்வார்த்தை ஒரு வாக்குத்தத்தமாயிருந்தால், அவர் வாக்களித்தபடி செய்ய அவரை நம்பினர். 'தேவரீர் சொன்னபடியே செய்யும்'. 'தேவரீர் பேசியிருக்கின்றீர்' 'உமது வாக்குத்தத்தின்படியே' 'உமது வார்த்தையின்படியே' என்ற சொற்றொடர்கள் மூலம், கடவுள் வாக்குத்தத்தத்தில் என்ன சொன்னாரோ அவை அவர்கள் ஜெபத்தின் ஆணிவேரும் உயிருமாயிருந்ததைக் காட்டினர். அவ்வார்த்தை ஒரு கட்டளையாயிருந்தால், கடவுள் சொன்னபடியே செய்தனர். கடவுளோடு கொண்ட ஐக்கியமே அவர்கள் வாழ்க்கையாயிருந்தது சொல்லும், கருத்தும் பரிமாறப்பட்டன. கடவுள் சொன்னதைக் கேட்டனர். கேட்டபடி செய்தனர். அப்படியே அவர்கள் சொன்னதைக் கடவுள் கேட்டனர். கேட்டபடி செய்தனர். அவர் பேசும் ஒவ்வொரு வார்த்தையையும் நமக்கு நிறைவேற்ற கிறிஸ்து தம்மை முற்றும் ஒப்புக்கொடுக்கிறார். அப்

படியே ஒவ்வொரு வார்த்தைக்கும், அதனை முழுமனதுடன் கைக்கொள்ளவும், அதன் நிறைவேறுதலைப் பெறவும் நம்மிடம் எதிர்பார்க்கிறார்.

'என்னுடைய வார்த்தைகள் உங்களில் நிலைத்திருந்தால்' என்ற நிபந்தனை மிக இலேசானது. தெளிவானது. அவரது வார்த்தைகளில் அவரது சித்தம் வெளியாகிறது. அவரது வார்த்தைகள் நம்மில் நிலைப்பதால் அவரது சித்தம் நம்மை ஆளுகிறது. என் சித்தம் வெறும் பாத்திரமாகி அவரது சித்தத்தால் நிறைகிறது. அவர் எனக்குள் இருக்கிறார். கீழ்ப்படிதலாலும், விசுவாசத்தாலும் எனது சித்தம் பலப்படுகிறது. அது அவரோடு நெருங்கியிசைகிறது. 'என்னுடைய வார்த்தைகள் உங்களில் நிலைத்திருந்தால் நீங்கள் கேட்பதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்' என்ற இந்த வாக்குத்தத்தத்தை எவர் விசுவாசிக்கின்றாரோ அவருக்கு, எவர் அதன்படி செய்கின்றாரோ அவருக்கு, அவ் வாக்குத்தத்தம் முற்றும் நிறைவேறும்.

கிறிஸ்துவின் மெய்யன்பரே! நமது ஜெபங்கள் விடைபெறுமற்போனதற்குக் காரணம், இப்பொழுதாவது தெரிந்துகொள்ளுங்கள். தேவன் வாயிலிருந்து வருகிற வார்த்தைகளேயல்லாது வேறெதுவும் நன்மைப் பலவான்களாக்காது. அவ்வார்த்தையில் நாம் பிழைக்கவேண்டும் கிறிஸ்துவின் வார்த்தையில் நாம் பிரியங்கொள்வதும் நாம் அதில் பிழைப்பதும், அது நம்மில் நிலைப்பதும் கிறிஸ்துவோடு நம்மை ஐக்கியப்படுத்தும். உலகுக்கடுத்தவை அனைத்தும் அழியும். கடவுள் சித்தத்தை நிறைவேற்றுகிறவனே என்றும் நிலைத்திருப்பான்.

உமது வார்த்தைகள் என்னில் நிலைத்திருக்கக் கிருபை செய்தருளும். ஆமென்.

கி. மு. சங்கப் பொருட்கள்—ஆகஸ்டு 1955.

இளைஞர் ஊழியன்

ஜனத்தின் மத்தியில் இயேசு

(1) ஜனங்களுக்கு உணவளித்தல்.

ஆகஸ்டு 1. அற்புதத்திற்குப் பின் அடையாளமா?

யோவா 6 : 28-35

„ 2. "வானத்திலிருந்து இறங்கின அப்பம்" யாத் 16 : 6-18

„ 3. *ஜீவ அப்பம் யோவா 6:47-58*

„ 4. *முதலில் செய்யவேண்டியவற்றை முதலில் செய் லூக் 10:38-42*

„ 5. *அப்பத்தினால் மாத்திரமல்ல மத் 4:1-4*

„ 6. *“என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து கிரியை முடிப்பதே எனக்குப்போஜனம்” யோ 4:19-34*

„ 7. *ஜனத்தின் மத்தியில் இயேசு (1) ஜனங்களுக்கு உணவளித்தல் மாற்கு 8:1-13*

தற்பிரதிஷ்டை என் ஜீவன் (7) என் புத்தி.

„ 8. *கொடுக்கப்பட்டது சங் 8:1-9*

„ 9. *தியானிக்கத்தக்கது யோசுவா I:1-9*

„ 10 *ஒழுங்குபடுத்தப்பட்டது பிலி 2:1-16*

„ 11. *மதிப்பிடப்பட்டது II தீமோ 1:1-18*

„ 12. *ஒப்புக்கொடுக்கப்பட்டது பிலி 4:4-14*

„ 13. *ஆவிக்குறிய ரோ 8:1-9*

„ 14 *“எந்தன் ஜீவன் புத்தி சொந்தமாக ஆளுமே” மத் 23:34 40*

ஜனத்தின் மத்தியில் இயேசு (2) வியாதிஸ்தர் மத்தியில்

ஆகஸ்ட் 15 *தனியாக துக்கம் கொண்டாடியவள் லூக் 7:1-15*

„ 16 *நண்பர் துணையின்றி கஷ்டப்பட்டவன் யோ 5:2-13*

„ 17 *தீண்டப்படக்கூடாதவன் லூக் 5:12-16*

„ 18 *வல்லமையுள்ள தெய்வீக வைத்தியன் மாற் 5:22-43*

„ 19 *புதுப்பிக்கும் ஜெபம் மாற் 1:29-35*

„ 20 *ஜெபத்தின் வல்லமை மாற் 9:14-29*

„ 21 *ஜனத்தின் மத்தியில் இயேசு (2) வியாதியஸ்தர் மத்தியில்*

ஜனத்தின் மத்தியில் இயேசு (3) தேவாலயத்தை சுத்திகரித்தல்

ஆகஸ்ட் 22 *விசுவாசத்துக்கும் ஆராதனைக்கும் ஏற்றஸ்தலம் லூக் 2:41-49*

„ 23 *தேவன் தெரிந்துகொண்டஸ்தலம் 2 நாளா 7:11-18*

„ 24 *ஜெபவீடு ஏசா 56:1-7*

„ 25 *துர்ப்பிரயோகத்திற்குத்தண்டனை எரே 7:1-14*

„ 26 *கீழ்ப்படியாமையின் பயங்கர முடிவு லூக் 21:1-6*

„ 27 தெய்வீக பயங்கர பிரசன்னம் மல்கியா 2 : 17. 3 : 1-4
„ 28 இயேசு ஜனத்தின் மத்தியில் (3) தேவாலய சுத்திகரிப்பு மத் 21 : 10-17

ஜனத்தின் மத்தியில் இயேசு (4) மகிமையான பவனி

ஆகஸ்ட் 29 " வருகிறவர் பாக்கியமுடையவர் " சங் 72 : 11-19
„ 30 ஓர் பழமையான வழக்கம் 2 ராஜா 9 : 11-13
„ 31 சாலமோன் இராஜா வாக்கப்பட்டான் 1 நாளா 29 : 18-25

வேத வினுக்கள்.

(விடைகளுக்கு மற்றொரு பக்கம் பார்க்கவும்—பர்)

1. பஸ்கா ஆட்டுக்குட்டியைப்பற்றிய விஸ்தரிப்பு வேதத்தில் எங்கே காணப்படுகிறது?

2. ஆரோகண சங்கீதங்கள் எவை? அவற்றின் அர்த்தம் என்ன?

3. கூலி கொடுப்பதைப்பற்றி யூதப்பிரமாணம் என்ன?

4. எபிரேயர் உடைகளில் ஓரத்திலுள்ள தொங்கல்களும், அதில் கட்டப்பட்டிருக்கும் இளநீலநாடாக்களும் எதைக்குறிக்கிறது?

5. பஸ்காவிற்கு மற்றொரு பெயர் என்ன?

6. மெல்கிசெதேக் யார்?

7. வலதுகண்கள் பிடுங்கப்படும் என்று அம்மோனியரால் மிரட்டப்பட்ட பட்டினம் எது? யார் அதை மீட்டது?

8. பரி. யாக்கோபு எதை ராஜரீகப் பிரமாணம் என்கிறார்?

9. பரி. பவுலின் நிருபங்களில் எந்த நிருபம் சுற்றுக்கடிதம்?

10. எழுதப்பட்ட வண்மையான குறிக்கல்லைப்பற்றி எங்கே வாசிக்கிறோம்?

11. எந்த இரண்டு சுவிசேஷங்களில் கர்த்தருடைய ஜெபம் வருகிறது?

12. வியாபார சம்பந்தமாய் இஸ்ரவேலருக்குள் இருந்த சட்டம் என்ன?

— செல்வம் டேயிலர், பசுமலை.

பந்தயக் கதைப் போட்டி.

பெப்ரவரி 1—1955

பந்தயப் போட்டிக்காக கதைகள் அனுப்பிய நண்பர்கள்.

கிறேஸ் ராயப்பன், T. சாமுவேல், விஜயாள், உவில்லியம் துரைராஜ். } திண்டுக்கல்

பொன்சிராப், மல்கியா, பிராங்க்சாமுவேல், சந்தியாகு ஐயர், தேவசுந்தரம், தேவசகாயம, காராஜேம்ஸ், மூர்த்தி ஆபிரகாம், பிச்சமுத்து, தேவசெல்வம், விஜயாள் ஜெயராஜ், எசடியாள் தேவசகாயம், M. S. ஜெயராஜ், எஸ் மோஸஸ் } பசுமலை

பாக்கியம் அம்மாள், அருள் அற்புதமணி	சின்னமாங்குளம்.
எபினேசர் விக்டோரியா ...	கொட்டக்குடி,
ராபர்ட் ஆசிரியர்	மானாமதுரை
செல்லப்பா எட்வர்ட்	நிலக்கோட்டை
கோயில்பிள்ளை	அருப்புக்கோட்டை
தேவசகாயம்	ராஜபாளயம்
தானியேல் துரைசாமி	பொருளூர்
தனமணி காபிரியேல் }	மதுரை
A. C. விக்றர் }	மதுரை
ஜாண் ரூஸ்வெல்ட்	தேனி.

பந்தயக் கதைப் போட்டியில் வெற்றி பெற்றவர்கள்.

முதல் பரிசு M. S. ஜெயராஜ்
வேதபாடசாலைமாணவர்
பசுமலை (வலைசை)

இரண்டாம் பரிசு A. C. விக்றர்
37, ஆரப்பாளயம் ரோடு, மதுரை

மூன்றும் பரிசு S. மோஸஸ்
வேதபாடசாலை, பசுமலை

நான்காம் பரிசு ஜாண் தேவசெல்வம்
போதனைமுறைப்பள்ளி, பசுமலை

குறிப்பு: —1. பரிசுபெற்ற கதைகள் சத்திய வர்த்தமானியில் இடம் இருக்கும்போது பிரசுரமாகும்.

2. ஜூலைமாதம் வந்த போட்டிக் கதைகளை நியாயாதிபதிகளிடம் அனுப்பியிருக்கிறோம். அவர்களின் தீர்ப்பு வரும்போது விவரங்களை பத்திரிகையில் பிரசுரிப்போம். (ப-ர்)

கடவுள் உண்டா?
அல்லது
தெய்வ நம்பிக்கை

எழுதியவர் :
திரு. வீ. ஜெயராஜ், B.A , L.Th.,
மதுரை-இராமநாதபுர அத்தியட்சாதீனக் கிறிஸ்தவ இலக்கியத்
தனி அலுவலாளர்

உலகோர் அமைதியின்றி உள்ளங் கலங்குவதேன்?

சக்திகளுள் எல்லாம் தலைசிறந்த சக்தி ஆத்மீக சக்தி. அஃதின்றி, மற்ற சக்திகளனைத்தும இருப்பதே, இன்றைய உலக அமைதியின்மைக்கு மிக முக்கிய காரணம். அமெரிக்கா, ஐரோப்பா, ருசியா போன்ற ' குபேர நாடுகளில் ' பலமுண்டு, பொருளுண்டு, பலத்த கலையுண்டு, நலமுண்டு எனினும் அங்குதான் பயமும் திகிலும், பரபரப்பும் அவநம்பிக்கையும் 'தாண்டவ' மாடுகின்றன. நம் நாட்டிலாவது பட்டினியுண்டு, பசியுண்டு, அறியாமையுண்டு. ஆனல் அந்நாடுகளிலோ அவை இல்லை என்று சொல்வதுமிகையாகாது. அப்படியிருந்தும அங்கும் இங்கும் அமைதி நிலவாது அவதிப்படுவதற்குக காரணம் யாது? ஆன்ம வன்மையை யிழந்து புத்தி வன்மையையும் சக்தி வன்மையையும் முற்றும நம்பியிருப்பதே காரணம்.

விஞ்ஞானம் உலகில் அமைதியை உண்டு பண்ணுமா?

விஞ்ஞானத்தின் சிகரங்களாக இன்று அணுகுண்டு, நீர் வாயுக்குண்டு முதலியன விளங்குகின்றன. இவ் 'வரக்கர்களால்' உலகில் அமைதியை நிலைநாட்ட முடியும் என்று வல்லரசு நாடுகள் நம்பின. ஆனல் இன்று அக்கண்மூடித்தனமான நம்பிக்கை மண்மூடிப்போயிற்று. நீர் வாயுக் குண்டைப் பயன்படுத்தும் நாடே வெற்றிபெறினும், முழு உலகும் அழியும் என்று எயின்ஸ்டெயின், பெர்ட்ராண்ட் ரசல் போன்ற விஞ்ஞானிகள் தீர்ப்புக்கூறிவிட்டனர். பயத்தால், உலகில் அமைதியை நிலைநாட்ட முடியாது அடுத்த வீட்டுக்காரர் மீது ஏவிவிடுவதற்காக, காட்டிலிருந்த கரடி, புலி, சிங்கத்தைக் கொணர்ந்து வீட்டிற்குள் அடைத்து அவற்றினின்றும் தப்ப முடியாது தவிக்கும் பைத்தியகாரன் நிலைமைக்குத்தான், இன்றைய விஞ்ஞானம் கொண்டுபோய்விட்டிருக்கிறது. இன்று அமைதியை நிலைநாட்டுவது அரசியல் தந்திரமுமன்று, அணுசக்தி மந்திரமுமன்று ஹிட்லர்பயத்தால் கைகோத்துறவாடின ருசியாவும் அமெரிக்காவும். ஆனல் இன்றைய நிலையாது? அன்பின் அடிப்படையில, உண்மையின் அடிப்படையில், ஆன்மவன்மையின் அடிப்படையில் உருவாகாத உறவுகள், மாநாடுகள் ஆபத்திலேயே கொண்டுபோய்விடும். இவவுண்மையைப் போலியுறவுகொண்ட, அமெரிக்காவும், ருசியாவும் மெய்ப்பித்துவிட்டன. எனவே இன்றைய உலகின் தேவை ஆத்மீக சக்தியே. "கர்த்தரை நம்பி நன்மை செய்; தேசத்தில் குடியிருந்து சத்தியத்தை மேய்ந்துகொள்" (சங். 37 : 3) "சிலர் இரதங்களைக் குறித்தும், சிலர் குதிரைகளைக் குறித்தும் மேன்மை பாராட்டுகிறார், நாங்களோ எங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைக் குறித்தே மேன்மைபாராட்டுவோம்' (சங் 20 : 7) "முதலாவது தேவனுடைய இராஜியத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது

இவைகள் எல்லாம் உங்களுக்குக் கூடக்கொடுக்கப்படும்" (மத். 6 : 33) என்றபடி இன்றையத் தேவை தெய்வ நம்பிக்கையே எப்படிப்பட்ட தெய்வ நம்பிக்கை? இயேசுகிறிஸ்துவால் வெளிப்படுத்தப்பட்ட தெய்வ நம்பிக்கையே தேவை.

கிறிஸ்தவ நாடுகளில்தானே அமைதியில்லை. கிறிஸ்துவால் வெளிப்படுத்தப்பட்ட கடவுளை வணங்குவோர்தானே அங்குளர். ஒரு கையில் மலைப்பிரசங்கம்— மறுகையில் அணுக்குண்டு என்ற நிலை, அங்குதானே உண்டு அப்படி இருக்கக் கிறிஸ்து எப்படி அமைதி நிலவச் செய்வார்? என்று கேட்கின்றனர் சிலர். இதில் ஒரு மயக்க உணர்வு தொனிக்கிறது. யார் கிறிஸ்தவர் என்பதையறியாமையாலேயே இத்தகைய கேள்விகள் அடிக்கடி கேட்கப்படுகின்றன செடியும்கொடியும்போல, கிறிஸ்துவுக்குள் கிறிஸ்தவரும், கிறிஸ்தவருக்குள் கிறிஸ்துவும் நிலைத்திருந்து, உலகில் ஒருவரிலொருவர் அன்புகூர்கிறவரே கிறிஸ்தவர் இதற்கு விலக்கான எவரும் கிறிஸ்தவரல்லர் இந்த வரையறை வாக்கியத்தின்படியே கிறிஸ்தவ நாடுகளைப்பற்றி முடிவு கூறவேண்டும் இவ்வுண்மைக்கு முரண்பட்ட மக்கள் கிறிஸ்தவராகார்.

சமயம் என்பது யாது?

தனியாளின் அகவாழ்வைத் தூய்மை செய்வதே சமயம். சமயச் செல்வாக்கால் அகத்தில் உருவாவதே குணம் குணத்தின் செல்வாக்கால் புறத்தில் பிறர் காண வெளிப்படுவதே நடத்தை. தனிப்பட்ட நிலையில் ஒருவன் எதைச் சிந்திக்கின்றானோ, எதைச் செய்கின்றானோ அதுவே அவனது உண்மையான சமயம் உள்ளொன்றும் புறமொன்றுமாய்க் காணப்படுவது போலிச சமயம் சமயம் தூயதாயிருக்கலாம் அல்லது தீயதாயிருக்கலாம் ஆளைப்பொருத்து. ஆனால், 'சமயம் ஒரு அபினி. சமயம் மக்கள் முன்னேற்றத்தின் முட்டுக்கட்டை ஆதலால் சமயம தேவையில்லை' என்று சிலர் கூறுகின்றனர் இக்கூற்றுக்கு அவர்கள் சமயத்தைப் பற்றித் தவறான கருத்துக்கொண்டதே காரணம் ஒருவனது அந்தரங்கமான அகவாழ்க்கையைத் தூய்மை செய்யாதது சமயமாகாது அது போலிச் சமயம். அப்படிப்பட்ட போலிச் சமயம்தான் மேலே கண்ட குறைபாடுகளுக்கு இடம் தந்தது கிறிஸ்து குறித்த, கிறிஸ்து காட்டிய சமயம் அது அன்று. கிறிஸ்துவுக்குள் நிலைத்திருந்து ஒருவரிலொருவர் அன்புகூர்வதே கிறிஸ்தவம். பெயரளவில் கிறிஸ்தவராயிருப்பவர் கிறிஸ்தவரல்லர். 'உப்பார் கடல் வாழ் மீனுக்கும், உப்பிட்டால்தானே ருசிக்கும். இப்பார் கிறிஸ்தவர் எவர்க்கும் இயேசெனும் உப்பதாலதான் ருசிக்கும் என்றபடி இயேசுவின் சாரம் இருதயத்தில் இடம் பெறாத மக்கள் கிறிஸ்தவராகார். கிறிஸ்து சமயத்தில் தீமை காணப்படுவதற்குக் காரணம் சமயம் அன்று. சமயம் தூயது. சமயத்தின்படி நடவாத மக்களின் செயலே தீயது எனவே சமயத்தைப் பழிப்பது பகுத்தறிவன்று போலிக் கிறிஸ்தவரே பொறுப்பாளிகள். அப்படியே விஞ்ஞானத்திலும் வேறு எஞ்ஞானத்திலும் தீமை காணப்படுவதற்கு அக்கலைகள் காரணமல்ல. அவற்றைத் தீய வழியில் பயன்படுத்தும் மக்களே காரணம் ஆதலின், "சமயம் ஒழிக. கடவுள் ஒழிக" என்பது அறியாமை. இக்கூற்று சுவாசப்பையில் நற்காற்றும் தூர்க்காற்றும் சேர்வதால் சுவாசப்பை தேவையில்லை என்பதையும், தலை

யில் பேனுண்டாவதால் தலை தேவையில்லை என்பதையும் ஒக்கும் எனவே தனியாள் சீர்படின் சமுதாயம் சீர்படும் சமுதாயம் சீர்படின் உலகம் சீர்படும் இன்றைய உலகில் அமைதி நிலவ, சம்காதரத்துவம் குலவ, சமநிலை தலைஎடுக்க, சகல இன்னல்களையும் தடுக்க தரித்திரம், பிணி, அநீதி ஆகியவற்றை ஒடுக்க, தனியாளுடைய தெய்வ நம்பிக்கை சரியாகவேண்டும். இன்றைய உலகின் மக்கட் பெருக்கத்தில் 70 கோடி அல்லது மூன்றிலொரு பகுதியினர் கிறிஸ்தவர். முஸ்லீம்கள் 22½ கோடி. இந்துக்கள் 23 கோடி. கன்பூசியர் 35 கோடி. பௌத்தர் 15 கோடி. யூதர் ஒருகோடியே அறுபது லட்சம் இவர்கள் எல்லாரையும் மெய்ச் சமயிகள் என்று கருதுவதாலேயே சமயம் தேவையில்லை என்ற முடிவுக்கு வருகின்றனர். "அழைக்கப்பட்டவர் பலர் தெரிந்துகொள்ளப்பட்டவரோ சிலர்" என்று இயேசுநாதர் ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னரே மெய்க் கிறிஸ்தவரின் எண்ணிக்கைபற்றிக் கூறினார். அந்தச் "சிலரே" மெய்க் கிறிஸ்தவர் சிறுபான்மையோரான அவரையே "உலகின் ஒளி, உலகின் உப்பு, உலகின் புளித்தமா" என்றார். எனவே கிறிஸ்தவ சமயம் தேவையா? தேவையில்லையா? என்பதை அவர் குறிப்பிட்ட "சிலரைக்" கொண்டே முடிவுசெய்யவேண்டும் என்றுணர்க.

மேலும் அகவாழ்க்கையில் மாறுதல் இல்லாத புறச்சடங்குகள் ஆசாரங்கள் மட்டும் கிறிஸ்து சமயமன்று இதனை இயேசுநாதர் மத்தேயு 12ம் அதிகாரத்திலும், மார்க்கு 7ம் அதிகாரத்திலும் கண்டனம் செய்துளர். 'பலியை அல்ல, இரக்கத்தையும், தகனபலிகளைப்பார்க்கிலும் தேவனை அறிகிற அறிவையும் விரும்புகிறேன்' (ஓசியா 6 : 6) என்ற பழைய ஏற்பாட்டு அறைகூவலை அவர் மேற்கோள் காட்டுகின்றார். உள்ளத்தில் உண்மையற்ற போலிப் பக்தர்களின் விழாக்களைக் கடவுள் வெறுப்பதாக ஆமோஸ் தீர்க்கதரிசி அறிவுறுத்தியிருக்கின்றார்.

அப்படியானல் கிறிஸ்துவால் வெளிப்படுத்தப்பட்ட கடவுள் எப்படிப்பட்டவர் ?

இயேசுகிறிஸ்துவால் வெளிப்படுத்தப்பட்ட கடவுள் சருவ சிருஷ்டிகர், சருவ வல்லவர், சருவ வியாபகர், ஆவி, அன்பு, புனிதர், பரம தந்தை, சருவ உலக இரக்ஷகர், சத்தியர், நித்தியர், திரித்துவர். "அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம்." இன்னும் எத்தனையோ சிறந்த பண்பினர்.

மாபெரும் மறுப்பு

"யாம் அறிந்த இவ்வுலகு கொடியது. அதன் ஒழுங்கு கருணையற்றது. இயேசுகிறிஸ்துவால் வெளிப்படுத்தப்பட்ட கருணையுள்ள பரமபிதா இப்படிப்பட்டஒழுங்குள்ள உலகைத்தான் படைத்தாரென்றால், அவரது ஆட்சியில் இப்படித்தான் அக்கிரமமும், அநியாயமும், ஏற்றத்தாழ்வும் நிறைந்திருக்குமென்றால், அப்படிப்பட்ட கடவுளில் நம்பிக்கை வைக்க முடியாது" என்று பலர் வாதிக்கின்றனர். இவ்வாதம் பல வகையில் தோற்றம் அளிக்கின்றது.

(1) "இவ்வுலகம் இயேசுகிறிஸ்துவால் வெளிப்படுத்தப்பட்ட கடவுளால் ஆளப்படவில்லை. இவ்வுலகம் அதற்குள் அடங்கியிருக்கும் பௌதீக இரசாயன அணுக்களின் சக்தியாலேயே, ஒரு இயந்திரம்போன்று தானாகவே இயங்குகிறது இவவுலகின் இயற்கை ஒழுங்கு பாரபட்சமற்றது. நல்லவர் கெட்டவர், மெலியவர் வலியவர் என்ற பாகுபாடு அதற்கு இம்மியுங் கிடையாது. தூயராயினும் சரி, தீயராயினும் சரி அதனை எவர் எதிர்த்தாலும் அழிவர். அதன் அகராதியில் மன்னிப்பு, தயவு, என்பன கிடையா. இவவுலகை ஆண்டு நடத்துகிறவர் கருணையுள்ள பரமபிதாவாயிருந்தால், பாவியர்மீதும் பட்சம் காட்டுகிறவராயிருந்தால் இத்தகைய கொடிய உலக ஒழுங்கு இருக்கவே முடியாது. இவ்வுலகைக்கொண்டு இதனை ஆளுபவர் இரக்கமுள்ளவர் என்றோ, பரமதந்தை என்றோ நம்ப முடியாது" என்பர் ஒரு சாரார்.

(2) "உலகில் எங்குபார்த்தாலும் துன்பமயம். எவரும் துன்பத்திற்குத் தப்புவதில்லை. தப்பமும் முடியாது. துன்பத்தின் பார்வையில் தகுதி, தகுதியின்மை என்பவைகட்கு மதிப்பே கிடையாது. தவறு செய்வோருக்கும், பாவம் செய்வோருக்கும் துன்பம் வருவது உண்மையாயினும், நிரபராதிகளுக்கும், பால்மணமாறாப் பச்சிளங் குழந்தைகட்கும் துனபம் வரத்தான் செய்கிறது. "வளாபார்தனிலே யாவருமே பகவான் பெற்ற பேரே எனில், பகைமையோடு பாகுபாட்டைப் படைத்தவர் யாரே? தாழ்ந்தோருயர்ந்தோராக மக்கள் வாழுகின்றாரே. சிலர் தனவந்தர் பலர் தரித்திரராய்க் காணுகின்றாரே! இது யார் செயல்? விதியா? வினையா? அறிந்து சொல்வீரே! கோடானுகோடி உயிர்களுக்கொரு தந்தை என்றாலே, சிலர் கோட்டையில் பலர் குடிசையில் குடி இருப்பதெதாலே? கூன் குருடு நொண்டி செவிடர் ஊமை பிறப்பதெதாலே? குறை நிறைகளுக்கே இதுவரைக்கும் முடிவு தெரியலே! இது யார் செயல்? விதியா? வினையா? அறிந்து சொல்வீரே" என்று பாடி ஓலமிடுகின்றனர். இயேசுநாதரால் வெளிப்படுத்தப்பட்ட பரமபிதா இத்துன்பக் காட்சியை எப்படிப் பார்த்துக்கொண்டிருக்க முடியும்? நாம் அவர் நிலையிலிருந்தால் உலகில் துன்பத்தை அறவே ஒழிப்போம். அல்லது இவவுலகையே அழிப்போம்" என்பர் மற்றொரு சாரார்.

(3) இவையிரண்டினையும்விட மிகப் பயங்கரமான மறுப்பு யாதெனில், "உலகமே பாவமயமாயிருக்கிறது. கடவுளையல்லாது இவ்வுலகம் நிலைத்திராது என்று கூறும்போது, அவரது சப்பூரண சற்குணத்திற்கும் அவரது சித்தத்திற்கும் விரோதமாகவே இவ்வுலகம் நடைபெறுகிறது. எதனைக் கடவுள் வெறுக்கிறதாகச் சொல்லப்படுகிறதோ அதனையே அவரால் படைக்கப்பட்டவர் என்று சொல்லப்படுகிற மக்கள் செய்கின்றனர். அவரது புனித அன்பிற்கும் பண்பிற்கும் இசைந்த, நலம் நிறைந்த உலகிற்குப் பதிலாக, தூயனவும் தீயனவும் நிறைந்த உலகையே காண்கின்றோம். தீமையிலிருந்து மக்களைக் கடவுள் மீட்டாலுங்கூட ஒரு சிறு பான்மையோரையே மீட்கின்றார். சமுதாயத்தை, உலக வரலாற்றைப் பார்த்தாலுங் கூட, நீதியிலும் அநீதியே பலமாயிருந்து வந்திருக்கிறது. தீமை ஓரளவு தோல்வியுறினும், தீமை பேரளவிற்கு வேறொரு வடிவில் தலைதூக்குகிறது.

இந்த உலகைத் தவிர வேறுலகையாமறியோம். இவ்வுலகை மாதிரியாக எடுத்துக்கொண்டால், இங்கே நியாயமே கிடையாது எங்கும் அக்கிரமமும் அநியாயமும்தான் நிறைந்திருக்கிறது வேறொரு உலகிருந்தாலும் இப்படித்தான் அங்கும் இருக்கும். ஆதலின் இயேசுகிறிஸ்துவால் வெளிப்படுத்தப்பட்ட புனித மெய்ப்பொருள் ஒன்றிருக்கவே முடியாது" என்பர் பிறிதொரு சாரார்

இவ்வாதங்கள் அனைத்தையும் அலசி ஆராயின், அவற்றுள் மிகைப்படக் கூறல், ஒரு புற நோக்கு, தவறாய் விளங்கிகொண்டவை பல உள. எனினும் எஞ்சியவற்றுள் உண்மையில்லை என்று சொல்லவோ அவை அவிசுவாசத்தின் விளைவுகள் என்று தள்ளவோ இடமில்லை. இம்மறுப்புகள் ஒவ்வொன்றுக்கும், அவற்றுள் இலைமறைகாய்களாய்க் கிடக்கும் உட்பிரிவுகட்கும் விடைதர முயல்வோம். ஆனால் ஒரு காரியம் இங்கு சொல்லப்பட வேண்டும். இம்மறுப்புகளை அடிப்படையாகக்கொண்ட எண்ணற்ற வினாக்களை, பள்ளிகளிலே, கல்லூரிகளிலே, போதனாமுறைக் கூடங்களிலே பயிலும் இளைஞர் சமயபாட வேளைகளிலே அடிக்கடி கேட்டு வருகின்றனர் இவை அவர்களே தாமாகச் சுயமாகச் சிந்தித்துக் கேட்பவையல்ல. மேடைப் பேச்சுகளிலே, நாஸ்திக நூற்களிலே, பிறமொழியிலிருந்து அரைகுறையாக மொழிபெயர்க்கப்பட்ட நூற்களிலே இரவல் வாங்கினவை. யாம் இங்கே தரும் விடைகள் ஒருவேளை இளைஞர் வயதிற்கும், அறிவிற்கும், அனுபவத்திற்கும் அப்பாற்பட்டனவாயிருக்கலாம். அப்படியிருப்பது தவிர்க்கமுடியாதது. எனவே இவ்விடைகளை ஒருமுறையன்ற, பலமுறை கவனமாய்ப்படித்துப் பயன்பெறுக.

முந்திய பிரிவில் கண்ட மறுப்பு எம்மட்டும் மெய் ?

மேலே கண்ட மாபெரு மறுப்பில் உலகம் என்ற சொல் 21 தடவை வருகிறது. (அ) உலகின் தன்மையாது ? (ஆ) "உலகம் தற்செயலாய்வந்தது. அதனைக் கடவுள் படைக்கவில்லை" என்ற கூற்று எதுகாறும் மெய் ? (இ) உலகில் துன்பம் இருப்பதேன் ? (ஈ) உலகில் ஏற்றத்தாழ்விருப்பதேன் ? என்ற கேள்விகள் அதில் அடங்கியுள. கருத்து குழப்பமடையாதபடி ஒவ்வொன்றையும் தனித்தனியாக ஆராய்வோம். ஏற்றத் தாழ்வு, துன்பம ஆகிய இரண்டையும்பற்றி "சமூகச் சமநிலை" "துன்புறவா தோன்றினான் மனிதன்" என்ற தலைப்புகளின் கீழ் இரு சிறு நூற்கள் இவவாண்டிற்குள்ளேயே வெளியிடப்படும். என்றாலும் வாசகர்கள் அவை வெளியாகும்வரை காத்திராதபடி அவற்றைப்பற்றிய சில முக்கிய கருத்துக்களையும் இங்கே விளக்குவோம்.

(அ). **இந்த உலகம்.** இந்த உலகு பிரபஞ்சத்தில் ஒரு பகுதியே. பிரபஞ்சமாகிய பேராசில் இப்பூமி ஒரு சிறு புள்ளிதான். இந்தப் பிரமாண்டமான பிரபஞ்சம் எத்தனை பெரிது ? அதில் நமதுலகின் இடம் யாது ? என்றறிந்தால்தான் நமது உலகைப்பற்றிய உண்மை ஓரளவு நமக்குப் புலப்படும் இல்லாவிடில் நமதுலகைப்பற்றித் தவறான முடிவுகள் செய்ய நேரிடும் பிரபஞ்சம் எவ்வளவு பெரிது ? இதற்கு விஞ்ஞானிகள்

தரும் விடை மனித கற்பனைக்கே எட்டாதது. கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக வான்கலை நிபுணர் சர். ஆர்தர் ஸ்தான்லி எடிங்டன் கூறுகிறபடி, பிரபஞ்சத்தின் சுற்றளவு 800 கோடி ஒளிவருடங்களிலிருந்து 50000 கோடி ஒளி வருடங்கள் வரையாம். அதாவது ஒரு செக்கண்டுக்கு 186000 மைல்கள் வீதம் ஒளி பிரயாணம் செய்கிறது ஒருநாளைக்கு 86400 செக்கண்டுகள். அப்படியானால் ஒரு ஒளி வருடம் $= 186000 \times 86400 \times 365$ மைல்கள். மிகக் குறைந்த எண்ணான 800 கோடி ஒளி வருடங்களுக்கு $186000 \times 86400 \times 365 \times 8000000000$ மைல்கள் அல்லது மிக அதிகமான எண்ணான 50000 கோடி ஒளிவருடங்களுக்கு $186000 \times 86400 \times 365 \times 500000000000$ மைல்களே நமது பிரபஞ்சத்தின் சுற்றளவு.

பூமியிலிருந்து இப்போதுள்ள தொலைநோக்கியின்மூலம் காணக்கூடிய மிகத்தூரத்திலுள்ள நட்சத்திரத்தின் தூரம் 14 கோடி ஒளிவருடங்கள். சராசரி அளவுள்ள ஒரு நட்சத்திரத்திற்குள் நமது பூமிபோல 10 லட்சம் பூமிகளை நிரப்பலாம். சூரியன் 1300000 பூமிகளை அடக்கும். சூரியன் குறுக்களவு பூமியின் குறுக்களவைப்போல் 109 மடங்கு. நமக்கு மிகச் சமீபத்திலுள்ள **புராக்ஸிமாசென்டாரி** என்ற வெள்ளியின் தூரம் 2500000 கோடி மைல்கள் அது சூரியன் தூரத்தைவிட 270000 மடங்கு அதிகம். அல்பா **ஓரியனிஸ்** என்ற வெள்ளி $2\frac{1}{2}$ கோடி சூரியனைக்கொள்ளும். **ஓப்ரிக்கிருன்** என்ற வெள்ளி 3 கோடி சூரியன் அளவு. **சிரியஸ்** என்ற வெள்ளியின் தூரம் 5100000 கோடி மைல்கள் சூரியனின் எடை 332000 பூமிகளின் எடை. வெறுங்கண்ணால் பார்க்கக்கூடிய வெள்ளிகள் சுமார் 3000. தொலைநோக்கியில் காணக்கூடியவை 150 கோடி. இன்றைய உலகிலுள்ள ஆண் பெண் சிசு எல்லாருக்கும் எல்லா நட்சத்திரங்களையும் பகிர்ந்தால் தலைக்கு 60 நட்சத்திரம் 200 பக்கங்கள் உள்ள 5 லட்சம் புத்தகங்களில் எத்தனை எழுத்துக்கள் உளவோ அத்தனை நட்சத்திரங்கள் உண்டு ஒரு நிமிஷத்திற்கு 1500 வெள்ளிகள் வீதம் எண்ண முடிந்தால் எல்லாவற்றையும் எண்ண 700 ஆண்டுகள் பிடிக்கும் சூரிய குடும்பத்தில் பூமி ஒரு அங்கம். பால வீதி அல்லது நாக வீதி மண்டலத்தில் (Galactic system) சூரிய குடும்பம் ஒரே ஒரு அங்கம். பால் வீதி மண்டலம் நட்சத்திர நகரங்களுள் ஒரே ஒரு அங்கம் என்றறிக.

இவ்வளவு பிரம்மாண்டமான பிரபஞ்சத்தில் நாம் வசிக்கும் இந்த உலகம் மேலே கண்ட 5 லட்சம் புத்தகங்களில் உள்ள எழுத்துக்களில் ஒரு புள்ளி அளவேயாம். எனவே இந்தப் புள்ளியின் தன்மையைக் கொண்டு அத்தனை கோடி எழுத்துக்களின் தன்மையை அறியமுடியுமா? புள்ளிபோன்ற இப்பூமியின் தன்மையை வைத்து முழுப்பிரபஞ்சத்தின் தன்மையை எவ்வாறு அறியமுடியும்? முழுப்பிரபஞ்சத்தின் அமைப்பு, ஒழுங்கு, தன்மை, நோக்கம் ஆகியவைபற்றியறியாத நாம் பூமியின் தன்மை, நோக்கம் ஆகியவற்றை எவ்வாறு அறியமுடியும்? (ஏசாயா 40 : 12-24 காண்க.)

2 மேலும் பரிணாம நாடகத்தில் நமது சம்மந்தம் ஒரே ஒரு காட்சிதான்.

(தொடரும்)

மதிப்புரை.

"சண்முகநாத கவிராயர்" ஜீவிய விருத்தாந்தத்தைப்பற்றிய ஓர் அழகிய நூல் வெளிவந்துள்ளது இதை வெளியிட்டோர் கனம் K. C. A. வேதரத்தினம் என்பார். இது 70 பக்கங்கள் கொண்டது விலை நாலே அணாதான். இச் சொற்பச் செலவில் வெளிவந்துள்ள இந்நூல் பெரிதும் பொக்கிஷத்தை உள்ளே அடக்கியுள்ளது என்னலாம் கிறிஸ்தவன் ஒவ்வொருவரும் படிக்க வேண்டிய நூல். முக்கியமாய் சுவிசேஷப்பிரயல்யத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு இது பெரிதும் உதவும் என்பதற்கையமில்லை. சுவிசேஷமாகிய நற்செய்தியைப் பரப்புவதில் சாட்சி பகருதல் ஓர் முக்கிய சாதனமாகும் இப்புத்தகம் அப்படிப்பட்ட ஓர் முக்கிய அனுபவ சாட்சியைப்பற்றிக் கூறுகிறது. பெரியாரின் ஜீவிய வரலாறும், அவர்களது அனுபவமும், அவர்கள் கிறிஸ்துவால் தடுத்தாட்கொள்ளப்படுவதும், அவர்களுக்கு வந்த இடையூறுகளை அவர்கள் மேற்கொள்வதும் அவர்கள் கிறிஸ்துவுக்காகச் சாட்சி பகருவதும் நமக்கு ஊக்கத்தையும் உற்சாகத்தையுமூட்டும். வாங்கி, வாசித்து பயனடைவீர்களாக. பிரதிகள் வேண்டியவர்:— கனம் K. C. A. வேதரத்தினம், 168, G. C. ரோடு. தூத்துக்குடி, திருநெல்வேலி ஜில்லா என்ற விலாசத்திற்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

---

16 AUG 1955

Lenox Press, Pasumalai. 3—8—1955. 500 C.